


# கோவையில் ஒரு கலைக்கோயில்

## சமையல் செய்வதுதான் ஹோம் சயின்ஸா?

அட்டையில்: பிரின்ஸிபால் திருமதி ராஜம்மாள் தேவதாஸுடன் மாணவிகள் தலைவி குமாரி உஷா என். படேல்

உங்களுக்கு ஒரு பெண் குழந்தை இருந்தால் பேசாமல் அந்தக் குழந்தையைக் கோயமுத்தூர் அவினாசிலிங்கம் ஹோம் ஸயன்ஸ் கல்லூரியில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டு வந்து விடுங்கள். அப்புறம் அந்தப் பெண்ணைப் பற்றிய கவலையே வேண்டியதில்லை உங்களுக்கு. பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவள் அந்தக் கல்லூரியை விட்டு வெளியே வரும்போது ஒரு எம்.எஸ்ஸி. பட்டதாரியாகவோ, அல்லது பி.எச்.டி. வாங்கிய டாக்டராகவோ இருப்பாள்.

பெண்களுக்கு இவ்விதம் நர்சரி வகுப்பு முதல் டாக்டர் பட்டம் வரை பயனுள்ள கல்வியை, வாழ்க்கையோடு ஒட்டிய கல்வியை, வழங்கி வரும் கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியை இப்போது அதன் பிரின்ஸிபால் திருமதி ராஜம்மாள் தேவதாஸுடன் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம். 'யார் இந்த ராஜம்மாள் தேவதாஸ்? இவரா இந்தக் கல்லூரியின் பிரின்ஸ்பால்! பார்த்தால் அப்படித் தெரியவில்லையே? ஒரு பிரின்ஸிபாலுக்கு வேண்டிய ஆடம்பரம், 'கெடுபிடி' எதுவுமே இல்லையே! பரம சாதுவாக ஒரு குடும்பத்தின் தலைவி போல் அல்லவா இருக்கிறார்?' என்றுதானே வியக்கிறீர்கள். அவர் அப்படித்தான்!

பெண் கல்வி என்பது மனை அறத்தை ஏற்று நடத்தக்கூடிய முறையில் அமைந்திருக்க வேண்டுமாதலால் அதற்கு மனைஇயல் (ஹோம் சயன்ஸ்) என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஹோம் ஸயன்ஸ் என்றால் ஏதோ சமைத்துச் சாப்பிடுவது என்று எளிதாக எண்ணிவிடாதீர்கள். அமெரிக்காவில் உருவான இந்தக் கல்வி முறை இங்கிலாந்துக்கும், பிறகு வேறு பல நாடுகளுக்கும் பரவியுள்ளது. உணவு தயாரிப்பது, உடல் நலம் காப்பது, குழந்தைப் பராமரிப்பு, வீட்டை அழகு செய்தல், முதலுதவி, வரவு-செலவு- என்று ஒரு குடும்பப் பெண்ணுக்கு வேண்டிய வாழ்க்கை முறை அத்தனையும் இங்கு கல்வியாக போதிக்கப்படுகின்றன. இத்தகைய அபூர்வக் கல்வி முறையை, நம் தமிழகத்துப் பெண்களின் பண்பை வளர்க்கும் முறையில் அமைந்துள்ள கல்வி முறையை, 'ஹோம் ஸயன்ஸ் காலேஜ்' என்ற பெயரில் நிறுவிச் சிறப்புடன் நடத்திவரும் பெருமை திரு அவினாசிலிங்கம் அவர்களைச் சேரும்.

பண்பு, ஒழுக்கம், கட்டுப்பாடு இம்மூன்றுக்கும் சேர்ந்தாற்போல் ஓர் உருவம் உண்டென்றால் அது திரு அவினாசிலிங்கம் என்று தாராளமாகக் கூறலாம். 1957-ம் ஆண்டில் இந்தக் கல்லூரியை ஏற்படுத்திய திரு அவினாசிலிங்கம் விவேகானந்தரிடம் நிறைய ஈடுபாடு கொண்டவராதலால் அவருடைய கொள்கைகளான 'கடமை, ஒழுக்கம், தொண்டு' இம் மூன்றுக்கும் முக்யத்துவம் கொடுத்து 'எழுமின் விழிமின், தொழுமின்' என்ற மூன்று சொற்களைக் கல்லூரியின் 'மாட்டோ' வாகக்







பிரின்ஸிபால் திருமதி ராஜம்மாள் தேவதாஸுடன் வைஸ்-பிரின்ஸிபால் திருமதி ஜி. கமலம்.





கொண்டிருக்கிறார்.

'மனை வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் உணர்ந்து கொள்வதற்கு பௌதிகம், ரசாயனம், உயிரியல், கட்டிடக் கலை போன்ற எல்லாக் கலைகளிலும் நல்ல அறிவைப் பெற்றிருக்க வேண்டியது முக்கியம் என்பது இந்தக் கல்லூரியின் முதல்வர் திருமதி ராஜம்மாள் தேவதாஸின் கருத்தாகும்.

சரி; முதலில் நர்ஸரிக்குச் சென்று பார்க்கலாம். வண்ண உடை உடுத்திய சின்னச் சின்னக் குழந்தைகள் நம்மைக் கண்டதும் எழுந்து 'குட்மார்னிங்' என்று சொல்வதே ஓர் அழகு. சுமார் ஐம்பது குழந்தைகள் இங்கே படிக்கின்றன. எல்லாம் சுறுசுறுப்பான குழந்தைகள், இந்தக் குழந்தைகள் எல்லோரும் இங்கே படிக்கிறார்கள் என்று சொல்வதைவிட அவர்கள் தங்கள் இச்சைப்படி ஆடிப் பாடிப் பொழுதைப் போக்குகிறார்கள் என்று கூறுவதுதான் பொருத்தம். ஆடும்போதும், பாடும்போதும், டீச்சரம்மா திருமதி விசாலாட்சியோடு பழகும்போதும் படிப்பும் ஒழுக்கமும் அவர்களுக்குத் தானாகவே வந்துவிடுகின்றன. காலை பத்தரை மணிக்குக் குழந்தைகளுக்கு ஒரு டம்ளர் சாத்துக்குடி ஜூஸ் அல்லது தக்காளி ஜூஸ் கொடுக்கிறார்கள். குழந்தைகள் ஜூஸ்



டம்ளரைக் கையில் வாங்கும்போது 'தாங்க் யூ' சொ
குழந்தைகள் விடுதியின் ஒரு மூலையில் ஒரு சிறிய
குழந்தைகள் தனித் தனியாக பொம்மைகளுக்குப்
என்று சொல்லிப் பெருமைப்படுகின்றன. இன்னொரு அ
பைகளில் தலை வாரிக் கொள்ளச் சீப்புகள் போட்டு
குழந்தைக்கும் ஒவ்வொரு சீப்பு. பக்கத்துச் சுவரில்
தனியாக டவல்கள். அத்தனை குழந்தைகளும் எப்ப
அடையாளம் கண்டு கொள்ளுகிறார்கள்! ஒவ்வொரு குழ
மான், மயில், சிங்கம் போன்ற சித்திரங்களை அந்த டவ







ரல்ல மறப்பதில்லை.
ப வீடு போன்ற பகுதி. பெண்
பெயர் வைத்து 'என் குழந்தை'
றையில் சுவரில் தனித் தனியாகப்
வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு
க துடைக்க அதேபோல் தனித்
படித் தங்கள் தங்கள் டவல்களை
ழந்தைக்கும் பிடித்தமான குருவி,
ல்களில் 'எம்ப்ராய்ட்' செய்திருக்






கிறார்கள். குருவி போட்ட டவல் உபயோகிக்கும் குழந்தை அதேபோல் குருவி போட்ட
பையிலிருந்து சீப்பை எடுத்துத் தலைவாரிக் கொள்கிறாள். 'இது என் சீப்பு' 'இது என்
டவல்' என்று அந்தக் குழந்தைகள் பெருமையாகச் சொல்லிக் கொள்கின்றன. இத்தனை
குழந்தைகள் சேர்ந்து விளையாடினாலும் லூட்டி அடிப்பதில்லை. சுவரிலே கண்டபடி
கிறுக்குவதில்லை. சாமான்களை உருட்டி விடுவதில்லை. விடுதிச் சுவரைப் பார்த்தால்
நேற்றுதான் சுண்ணும்பு அடித்த மாதிரி புது மெருகு குலையாமல் இருக்கிறது.
'சுண்ணும்பு அடித்து எத்தனை நாட்கள் ஆகின்றன?' என்ற நம் கேள்விக்கு 'ஒரு
வருடம்' என்று பதில் கிடைக்கிறது. அதை நம்ப முடியாமல் வியக்கிறோம்.
மீண்டும் பகல் பன்னிரண்டரை மணிக்குச் சாப்பாடு போடுகிறார்கள். கீரை,
தயிரோடு நல்ல சத்துள்ள உணவு. சாப்பாட்டுக்குப் பிறகு சில குழந்தைகள் வெளியே
உள்ள தோட்டத்தில் விளையாடுகின்றன. தூக்கம் வந்தால் களைத்துத் தூங்குகின்றன.
மறுபடியும் மாலை மூன்றரை மணிக்குப் பாலும் பழமும் தருகிறார்கள்.
நர்சரி என்பது வீட்டின் தொடர்புதானே தவிர பள்ளிக்கூடம் ஆகாது என்பதை
மனதில் கொண்டு விளையாட்டோடு விளையாட்டாக வாழ்க்கைக்கு உபயோகமான
விஷயங்களைப் பாட்டாகவும், கதையாகவும் சொல்லிக் கொடுக்கிறார்கள். குழந்தைக









திரு அவிநாசிலிங்கம்



மாணவிகள் அல்ல, ஆசிரியைகள்

ளுக்குப் 'பள்ளிக்கூடம் வந்திருக்கிறோம்' என்ற நினைப்பே இருப்பதில்லை. டீச்சர்கள் அவர்களை மிரட்டுவதில்லை. உருட்டுவதில்லை. பிரம்பைக் காட்டி பயமுறுத்துவதில்லை. ''குழந்தைகள் ஏதாவது தவறு செய்தால் 'அப்படிச் செய்யாதே' 'அதைத் தொடாதே' என்று நாங்கள் சொல்வது கிடையாது. இந்த மாதிரி 'நெகடிவ் அப்ரோச்' முறையில் குழந்தைகளின் மனது பாதிக்கப்படுகிறது'' என்கிறார் திருமதி தேவதாஸ். குழந்தைகளின் தாய் தந்தையரைக் கூட சில நாட்களில் இங்கே வரச் சொல்லி அவர்களுக்காக மாலை வகுப்பு நடத்துகிறார்களாம்.

குழந்தைகளையும் அவர்களுடைய மழலை மொழிகளையும் கொஞ்சம் மறந்து அப்பால் நகர்கிறோம். வழி நெடுக வேப்பமரத்து நிழல் நம்மைக் குளுகுளுவென்று வரவேற்கின்றது. ஆங்காங்கே மாணவிகள், பல மாநிலங்களிலிருந்து இங்கே வந்து படிக்கும் மாணவிகள், கும்பல் கும்பலாக மரத்தடியில் உட்கார்ந்து கொண்டும் நடந்து கொண்டும் புத்தகத்தில்ஆழ்ந்திருப்பதைப் பார்க்கிறோம். ஆயிரத்துக்கும் அதிகமான மாணவிகள் படிக்கும் கல்லூரியில் மற்றக் கலைக் கல்லூரியைப் போலவே பொருளாதாரம், கணிதம், ரசாயனம், சங்கீதம், விவசாயம் போன்ற பிரிவுகள் உள்ளன. அத்துடன் மனையியல் பிரிவில் 'டாக்டர்' பட்டம் வாங்குவதற்கு வேண்டிய வசதிகளும் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

ஆராய்ச்சிக் கூடங்களைக் கட்டி அவற்றில் மதிப்பு மிக்க விஞ்ஞானக் கருவிகளை வெளி நாடுகளிலிருந்து கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். ஆராய்ச்சிக்கு வேண்டிய அறிவு நூல்களும் இங்கே ஏராளமாக இருக்கின்றன. மாணவிகள் புத்தகசாலைகளுக்குள் எப்போதும் போய்ப் படிக்கலாம். பூட்டு இல்லாத இந்த லைப்ரரியில் இதுவரை ஒரு புத்தகம் கூடக் காணாமல் போனது கிடையாதாம். இரண்டு லட்சம் புத்தகங்கள் கொண்ட இந்த லைப்ரரியை மேலும் விரிவுபடுத்த ஒரு திட்டம் இருக்கிறதாம்.

அடுத்து 'ஹோம் சயன்ஸ்' சமையலறைக்கு அழைத்துச் செல்லப்படுகிறோம். யாரோ தெரிந்தவர்களின் வீட்டுக்குள் நுழைவது போல் தோன்றுகிறது. அங்கே







நாலைந்து மாணவிகள் சமையல் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இடம் சுத்தமாக இருக்கிறது. சுவர் ஓரமாக அம்மி, கல்லுரல், வாஷ் பேசின் எல்லாம் இருக்கின்றன. இன்னொரு பக்கம் காஸ் அடுப்பு, நடுவில் மேஜைகள். மாணவிகள் உணவு தயார் செய்கிறார்கள். யாருக்கு? ஒரு மில் தொழிலாளிக்கு. அவருக்கு என்ன சம்பளம், எந்த மாதிரி ஆகாரம், அவர் உடல் நிலையில் உள்ள கோளாறு,—இவ்வளவையும் தெரிந்து வைத்துக்கொண்டு அதற்கேற்ற முறையில் உணவு தயார் செய்கிறார்கள். இதுதான் ஹோம் சயன்ஸ்! டயபடீஸ்காரருக்கு எப்படிச் சமைக்க வேண்டும், ஜீரண சக்தி இல்லாதவருக்கு எப்படிச் சமைக்க வேண்டும் என்பதுதான் இதில் முக்கியம். அந்த விஞ்ஞானமுறைக் கல்வியைத்தான் குடும்ப இயல் என்ற பெயரில் இங்கே கற்றுத் தருகிறார்கள்.

இன்னொரு பிரிவில் தையல் கற்றுக் கொடுப்பதும், மற்றொரு பிரிவில் அறை அலங்கரிப்புச் சொல்லிக்கொடுப்பதும்கூட மனை இயலைச் சேர்ந்த கல்விதான்.

மாணவிகள் தங்கியிருக்கும் ஹாஸ்டலில் சுத்த சைவச் சாப்பாடுதான். சைவமானாலும் முட்டை மட்டும் சேர்த்துக் கொள்ளலாம். அதற்காக ஒரு கோழிப் பண்ணையும் உண்டு. பாலுக்காக மாடு வளர்க்கிறார்கள். மாட்டுச் சாணத்திலிருந்து காஸ் எடுத்து அடுப்பு எரிக்கிறார்கள்.

அவிநாசிலிங்கம் ஹோம் ஸயன்ஸ் கல்லூரிக்கே அழகு தருவது அதன் நடுநாயகமாக அமைந்துள்ள ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் ஆலயமும் பிரார்த்தனை மண்டபமும்தான். இந்த மண்டபத்தின் கம்பீரத்தையும் புனிதமான தோற்றத்தையும் கண்டு வியக்காதவர்களே கிடையாது. பிரார்த்தனை மண்டபத்தை உயரமான இடத்தில் அமைக்க வேண்டும் என்று தோன்றியதே அந்த எண்ணம் ஒன்றே போதும். மாலை வேளையில் பிரார்த்தனைக்காக மாணவிகள் அந்த மண்டபத்தின் படிகளில் கும்பல் கும்பலாக ஏறிச் செல்லும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

கல்லூரியின் ஒரு பகுதியில் சிறிய அழகான வீடு ஒன்று இருக்கிறது. மாணவிகள் ஏழெட்டுப் பேர் இதில் மாறி மாறிக் குடிபோகிறார்கள். இந்த வீட்டில் சமையலறை, குழாய், ஹால் எல்லாம் உள்ளன. மாணவிகள் இதில் கொஞ்ச நாட்கள் தங்கி இல்வாழ்க்கைக்கு ஒரு நல்ல பயிற்சி பெறுகிறார்கள்.

பக்தி, பண்பு, விஞ்ஞான அறிவு—இம் மூன்றும் கலந்த மனையியல் கல்லூரி ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற திரு அவிநாசிலிங்கம் அவர்களின் நீண்டகால ஆசை இங்கே நல்ல முறையில் பூர்த்தியாகி இருக்கிறது. கல்லூரியும் கட்டடங்களும் இருந்துவிட்டால் மட்டும் போதுமா? அதைச் சிறந்த முறையில் நிர்வகித்துத் திறம்பட நடத்துவதற்கு வேண்டிய சக்தி வேண்டாமா? அந்தச் 'சக்தி'யாக விளங்குபவர் இந்தக் கல்லூரியின் தலைவி திருமதி ராஜம்மாள் தேவதாஸ்தான்.

பல பட்டங்களும், பதக்கங்களும் பெற்றுள்ள திருமதி ராஜம்மாள் பல தடவை வெளிநாடு சென்று வந்தவர். அமெரிக்காவில் மூன்று ஆண்டுகள் தங்கி டாக்டர் பட்டம் பெற்றவர். பல பயனுள்ள புத்தகங்களை எழுதியுள்ளார். பல கல்லூரிகளின் நிர்வாகத்தில் பங்குகொண்டு அனுபவம் பெற்றவர். எளிமையான தோற்றமும் ஆழ்ந்த கல்வி அறிவும் அடக்கமான சுபாவமும் ஆடம்பரமில்லா உடையும் கொண்ட இந்த அம்மையார் பெற்றுள்ள பட்டங்களை வரிசையாக எழுதிப் பார்த்தால் அதுவே கிட்டத்தட்ட ஒரு பக்கம் நீண்டுவிடும் ஒரு நிறைகுடமாகத் திகழும் இந்த அம்மையாரின் மறு பெயர் அவிநாசி ஹோம் ஸயன்ஸ் கல்லூரி என்றாலும் மிகப் பொருத்தமே: இனிமையாகப் பேசுகிறார். பழகுகிறார். உடன் வேலை செய்யும் பேராசிரியர்களும், மாணவிகளும் இவரை அன்புடன் 'அம்மா, அம்மா' என்று அழைக்கும்போது அந்த அழைப்பில் பாசமும் பரிவும் கலந்திருப்பதைக் காண்கிறோம். சமயம் கிடைக்கும் பொழுதெல்லாம் திருமதி ராஜம்மாள் தமது கல்லூரிப் பேராசிரியர்களை அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் அனுப்பி பயிற்சி அளிக்கத் தவறுவதில்லை.

கல்லூரி ஸ்தாபகர் திரு அவிநாசிலிங்கம் ஓர் உண்மையான காந்தீயவாதி. இந்தக் கல்லூரிக்காகவும், பெரிய நாயக்கன் பாளையத்திலுள்ள ராமகிருஷ்ண வித்யாலயத்துக்காகவும் தம் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டு சீரிய முறையில் பணியாற்றி வருகிறார். கல்லூரி ஆசிரியைகளாலும் மாணவிகளாலும் 'அய்யா' என்று அன்பாக அழைக்கப்படுகிறார்.

''புதிய தமிழகத்திற்கு வருங்காலத் தாய்க்குலத்தை உருவாக்கும் திருப்பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது இந்த நிறுவனம்'' என்று தமிழக அமைச்சர் திரு மதியழகன் கூறியிருப்பது எவ்வளவு பெரிய உண்மை என்பதை ஒரு முறை இந்தக் கல்லூரிக்குச் சென்று பார்த்தவர்களாலேயே உணர முடியும்.